அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல: 357

பொது நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 07.
....11.... டிசம்பர். 1986.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள், யாவர்க்கும்.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள அரசாங்க உத்தியோகத்தர்
-களுக்கு ஊக்குவிப்புப் படிக் கொடுப்பனவு.

---

திணைக்களத் தலைவரினால் இடமாற்றம் செய்யப்பட்டு வடமாகாணத்தில் அல்லது கிழ் மாகாணத்தில் உள்ளவொரு மாவட்டத்தில் அல்லது பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளுக்கான தேவைக்காக பாதிக்கப்பட்டவொரு பிரதேசமாக நிர்ணயிக்கப்பட்ட மாவட்டமொன்றில் அல்லது மாவட்டமொன்றைவிடச் சிறிய வரையறுத்த பிரதேசமொன்றில் பணிபுரியும் அரசாங்க உத்தியோகத்தரொருவருக்கு மாதமொன்றுக்கு படிகள் நீங்கலாக அவருடைய மாதாந்த சம்பளத்தின் அரைவாசி அல்லது 500/- ரூபா இவற்றில்/குறைவானதோ அத்தொகை வழங்கப்படலாம்.

02. வெவ்வேறு அமைச்சுக்களில் எதிர்நோக்கப்படும் வெவ்வேறு நிலைமைகளின் நோக்கில், குறிப்பாக கிடைக்கக்கூடிய வளம் கொண்டு படியை கொடுக்கவல்ல அவற்றின் திறன் தொடர்பில், அமைச்சு ஒவ்வொன்றினதும் செயலாளர் அவருடைய நோக்கெல்லைக்குட்பட்ட நிறுவனங்கள் தொடர்பில் கொடுப்பனவுகள் பற்றித் தீர்மானிக்கும் தற்றுணிபுடையவராவர். இக்கொடுப்பனவுகளைச் செய்வதற்கு அரசாங்க நிருவாக அமைச்சின் செயலாளருடைய ஒருப்பாடு பெறப்படல் வேண்டும்.

03. வட அல்லது கிழ் மாகாணத்திலுள்ள மாவட்டமொன்றில் அல்லது பாதிக்கப்பட்ட பிரதேசமாகத் தீர்மானிக்கப்பட்ட மாவட்டமொன்றில் அல்லது மாவட்டத்தைவிடச் சிறிய வரையறுக்கப்பட்ட பிரதேசமொன்றில் பணிபுரிகின்ற பின்வரும் பகுதிகளில் எதனிலுமுள்ள அரசாங்க உத்தியோகத்தரொருவர் ஊக்குவிப்புக் கொடுப்பனவைப் பெறுவதற்குத் தகுதியுடையவராவார்.

(அ) பாதிக்கப்பட்ட பிரதேசமாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தபோதிலும் குறிப்பிட்டவொரு மாவட்டத்தில் அல்லது பிரதேசத்தில் பணிபுரிவதற்காக குறிப்பாக ஆட்சேர்க்கப்பட்டு அம்மாவட்டத்திற்குள் அல்லது பிரதேசத்திற்குள் பணிபுரிகின்றவொரு அரசாங்க உத்தியோகத்தர்.

.....(2

(ஆ) ஊக்குவிப்புப் பணக் கொடுப்பனவுக்காக இச்சுற்றறிவிப்பு நடைமுறைக்கு வரும் காலத்தில் வட அல்லது கீழ் மாவட்டத்திலுள்ள மாவட்டமொன்றில் அல்லது பாதிக்கப்பட்ட பிரதேசமாகத் தீர்மானிக்கப்பட்ட மாவட்டமொன்றில் அல்லது மாவட்டத்தைவிடச் சிறிய வரையறுத்த பிரதேசமொன்றில் ஏற்கனவே சுயேச்சையாக இருந்தவொரு அரசாங்க உத்தியோகத்தர்.

(இ) வட அல்லது கீழ் மாகாணத்திலுள்ள மாவட்டமொன்றுக்கு அல்லது பாதிக்கப்பட்ட பிரதேசமாகத் தீர்மானிக்கப்பட்ட மாவட்டமொன்றுக்கு அல்லது மாவட்டமொன்றைவிடச் சிறிய வரையறுத்த பிரதேசத்திற்கு திணைக்களத் தலைவரினால் இடமாற்றம் செய்யப்பட்டதன் பேரில் அங்கு சுயேச்சையாக கடமையை ஏற்றுள்ளவொரு அரசாங்க உத்தியோகத்தர்.

(ஈ) வட அல்லது கீழ் மாகாணத்திலுள்ள மாவட்டமொன்றில் அல்லது பாதிக்கப்பட்ட பிரதேசமாகத் தீர்மானிக்கப்பட்ட மாவட்டமொன்றில் அல்லது மாவட்டமொன்றைவிடச் சிறிய வரையறுத்த பிரதேசமொன்றில் பணிபுரிவதற்காக இடமாற்றத்திற்கு விண்ணப்பித்து அங்கு பணிபுரிவதற்கு அமர்த்தப்பட்டுள்ளவொரு அரசாங்க உத்தியோகத்தர்.

(உ) திணைக்களத் தலைவரினால் மாவட்டத்திற்கு/ பிரதேசத்திற்கு வெளியே செய்யப்பட்ட இடமாற்றம் செய்யப்பட்டபோதிலும் தமது சொந்த விருப்பத்தேர்வின் மீது வடமாகாணத்தில் அல்லது கீழ் மாகாணத்தில் உள்ளவொரு மாவட்டத்தில் அல்லது பாதிக்கப்பட்ட பிரதேசமாகத் தீர்மானிக்கப்பட்டவொரு மாவட்டத்தில் அல்லது மாவட்டத்தைவிடச் சிறிய வரையறுத்த பிரதேசத்தில் தொடர்ந்திருக்கின்றவொரு உத்தியோகத்தர்.

(ஊ) வட அல்லது கீழ் மாகாணத்திலுள்ள மாவட்டத்தில் அல்லது பாதிக்கப்பட்டவொரு பிரதேசமாகத் தீர்மானிக்கப்பட்டவொரு மாவட்டத்தில் அல்லது மாவட்டத்தைவிடச் சிறிய வரையறுக்கப்பட்ட பிரதேசத்தில் பதிவு பெற்ற வாக்காளராகவுள்ளவொரு அரசாங்க உத்தியோகத்தர்.

இத்திட்டம் 1986, நவம்பர் 1ஆம் தேதியிலிருந்து நடைமுறைக்குவரும்.

ஒப்பம் / (டி. பீ. ஐ. பி. எஸ். சிறிவர்த்தன)
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.